# பதவிகள் - வெற்றிடம்

## அரசகரும மொழிகள் திணைக்களம்

### II "ஆ" வகுப்பு சாரதி பதவி

அரசகரும மொழிகள் திணைக்களத்தின் II 'ஆ' வகுப்பு சாரதி பதவி பொருட்டு இவ்வறிவித்தலில் கொடுக்கப்பட்டுள்ள தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யும் இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், 'ஆணையாளர்', அரசகரும மொழிகள் திணைக்களம், பாஷா மந்திரய, 341/7, கோட்டே வீதி, இராஜகிரிய" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் 2008.01.15 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவம் வைத்து அனுப்பும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் "பதவி 'சாரதி பதவி' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். பிந்திய விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா. விண்ணப்பப்படிவம் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். தாமதமாகி கிடைக்கும் விண்ணப்பங்களும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

3. விண்ணப்பகாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

4. **வயதெல்லை.**- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இவ் உச்ச வயதெல்லை ஏற்புடையதன்று.

5. **கல்வித் தகைமைகள் / மாற்று தகைமைகள்.**- கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையொன்றில் குறைந்த பட்சம் எட்டாம் தரம் / ஆண்டு ஒன்பது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

6. **தொழிற்றுறை தகைமைகள்.**- (அ) தனியார் / வாடகை வாகனங்கள் மற்றும் பொதியில்லாத எடை ஹொண்டர் 24க்கு குறைந்த ஸ்ரெஷன் வெகன் வாகனங்களை ஓட்டுதல் தொடர்பில் மோட்டார் வாகன ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். (ஆட்சேர்ப்பு திகதிக்கு மூன்று வருடங்களுக்கு முன்னர் உரிய சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.) (வாகன வகுப்பு சீ மற்றும் சீ1)

(ஆ) வாகன சாரதி ஒருவராக 3 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். (சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

(இ) நெடுஞ்சாலை சட்ட விதிகள் பற்றி நல்ல அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

7. **உடல் ரீதியான தகைமைகள்.**- (அ) உயரம் குறைந்த பட்சம் 5 அடி 2 1/2 அங்குலமாக இருத்தல் வேண்டும்.

(ஆ) பகல் நேரங்களிலும் இரவு நேரங்களிலும் சேவையில் ஈடுபடக்கூடிய உடல் ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும் என்பதுடன் நல்ல கண்பார்வை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

8. **சம்பள அளவுத்திட்டம்.**- பீ. எல். (PL) 3-2006 (மாதாந்தம்) ரூபா12,360-10x 110 - 10x 120 - 10 x130-12x 140 - ரூபா 17,640

9. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்.**- (அ) இப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்; விதவை/ தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

(ஆ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரர் மூன்று வருட தகுதிகூர் காலத்துக்கு உட்பட்டவராகவும் ஏற்கனவே அரசாங்க சேவையில் / மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியை வகித்தவராயின் ஒரு வருட பதில் கடமையாற்றும் காலத்துக்கு உட்பட்டவராவார்.

(இ) தாபன விதிக் கோவையின் அத்தியாயம் II இலுள்ள 10 - 12 ஆம் பிரிவுகள் ஏற்புடையன.

(ஈ) 07/ 2007 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க, ஆட்சேர்க்கப்படும் சகல அலுவலர்களும் அவர்கள் அரசாங்க சேவைக்கு சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக, நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து 5 வருட காலத்துக்குள் மற்றைய அரசகரும மொழியில் தேர்ச்சியை பெறுதல் வேண்டும்.

10. **ஆட்சேர்ப்பு முறை.**- தகைமைபெற்ற சகல விண்ணப்பகாரர்களும்.-

I. எழுத்துப் பரீட்சையொன்றுக்கு தோற்றுதல் வேண்டும்.

II. எழுத்துப் பரீட்சையில் அதிக புள்ளி மட்டத்தைப் பெறும் விண்ணப்பகாரர்கள் வாகனம் ஓட்டும் தேர்ச்சி சோதனை ஒன்றுக்கு அழைக்கப்படுவார்கள்.

III. அத் தேர்ச்சி சோதனையில் சித்தியடையும் ஆட்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அதன் மூலம் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.-

(1) 1999.10.13 ஆந் திகதிய 1101/9 ஆம் இலக்கமுடைய பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

(2) ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பகாரர்கள் தங்களது விண்ணப்பங்களை உரிய திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பகாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற உறுதிமொழியை வழங்குதல் வேண்டும்.

(3) எவரேனும் விண்ணப்பகாரரின் விண்ணப்பப் படிவத்தில் பொய்யான தகவல்கள் ஏதும் இருப்பதாக அவர் தெரிவுசெய்யப்படுமுன்னர் கண்டுபிடிக்கப் பட்டால் அவர் தகைமை இழப்பதற்கு ஆளாவார் என்பதுடன் தெரிவு செய்யப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவார்.

அரசகரும மொழிகள் ஆணையாளர்,

அரசகரும மொழிகள் திணைக்களம்,
"பாஷா மந்திரய",
341/7, கோட்டே வீதி,
இராஜகிரிய.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசகரும மொழிகள் திணைக்களம்**

*II "ஆ" வகுப்பு சாரதி பதவி*

1. முழுப்பெயர்:- (தமிழில்) : -----.
(ஆங்கிலத்தில் ) : -----.

2. முதலெழுத்துக்களுடன் பெயர் :- (தமிழில்) : -----.
(ஆங்கிலத்தில் ) : -----.

3. தேசிய அடையாள அட்டை இலக்கம் : -----.

4. தனிப்பட்ட முகவரி :- (தமிழில்) : -----.
(ஆங்கிலத்தில் ) : -----.

5. அலுவலக முகவரி : -----.

6. பிறந்த திகதி : -----.
வயது (வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பம் அனுப்பும் இறுதித் திகதிக்கு)

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

7. பால் : -----.

8. விவாகமானவரா? /விவாகமாகாதவரா? :-----.

9. பிரசாவுரிமை :-----.

10. கல்வி கற்ற மொழி மூலம் :-----.

11. கல்வித் தகைமைகள்:_____.

| பாடங்கள் | தரங்கள் |
|---|---|
| | |

12. மோட்டார் வாகன ஆணையாளரினால் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரத்தின் இலக்கம், திகதி, வாகன வகுப்பு :-----.

13. நீங்கள் சாரதி ஒருவராக எத்தனை வருட அனுபவத்தைக் கொண்டுள் ளீர்கள்? : -----.

14. தற்போதைய தொழில் : -----.

15. உங்களைப் பற்றி விசாரித்து பார்க்கக்கூடிய இருவரின் பெயர்களும் அவர்களது முகவரிகளும் :-
(i) --------------.
(ii) --------------.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதிலுள்ள தகவல்கள் ஏதும் பொய்யானது அல்லது பிழையானது என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டு பிடிக்கப்பட்டால் நான் தகைமை இழப்பதற்கு ஆளாவேன் என்பதையும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது பற்றி கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித நட்ட ஈடுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

------------,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்

திகதி.-----.

12-238

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

**2007.06.29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான ஆசிரியர் கல்வி தொடர்பான சேவை முன் தொழிற்பயிற்சி நெறியொன்றை பயிலுவதற்குத் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கான அனுமதி - 2008**

(அ) 2007.06.29 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் 4.3.1 தொகுதியானது கீழ்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது:-

4. 3 பாடநெறி இலக்கம்:
03 - கணிதம் (சிங்களம்)
03 - கணிதம் (தமிழ்)
03 - கணிதம் (ஆங்கிலம்)

4. 3.1 2006ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் கணிதம், இணைந்த கணிதம், உயர் கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் யாதாயினும் மூன்று பாடங்களிலும் (ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு கணிதம், இணைந்த கணிதம், உயர் கணிதம் ஆகியவற்றில் ஏதாவதொன்றுடன் பௌதிகவியல், இரசாயனவியல் கூடியதாக இரண்டு பாடங்களில்) ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் வேண்டும் ;

அத்துடன்

4.3.2 சிங்களம்/தமிழ் மொழியில் சித்தியும், விஞ்ஞான பாடத்தில் (34) திறமை சித்தியும் உள்ளடங்கலாக க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) இந்த திருத்தம் ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு கணித பாடநெறியை பயில்வதற்கு மட்டுமே பொருத்தமானது.

2007.06.29 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் தொகுதி 6.3 யின் கீழ் ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பிக்க தகுதிபெற்ற விண்ணப்பதாரிகளிடையே கணித பாடத்துக்கு விண்ணப்பிக்க தகுதி வாய்ந்தவர்கள் மேற்குறிப்பிட்ட திருத்தத்துக்கு இணங்கலாக விண்ணப்பிக்க வேண்டும். 2007.06.29 ஆந் திகதி வர்த்தமானி அறிவித்தலுக்கேற்ப கணித பாடநெறிக்கு விண்ணப்பித்தவர்கள் மீள விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

(இ) 2007.06.29 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரமான விண்ணப்படிவத்துக்கு ஏற்ப பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2007.12.28 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கக்கூடியவாறு, "பிரதம ஆணையாளர், (ஆசிரியர் கல்வி), கல்வியியற் கல்லூரிகள் கிளை, கல்வி அமைச்சு, ' இசுருபாய' , பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

(ஈ) விண்ணப்பித்தல் தொடர்பான அனைத்து விதிகளும் நிபந்தனைகளும் 2007.06.29 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலுக்கு ஏற்புடையது என்பதை கவனத்திற் கொள்ளவும்.

ஆரியரத்ன ஹேவகே,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

12- 230

---

## தொழில்சார் மற்றும் தொழில்நுட்பக் கல்வி அமைச்சு

தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்

**கொழும்பு 10, ஒல்கோட் மாவத்தை, இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியால் (இலங்கை தொழில்நுட்பவியல் கல்லூரி) நடாத்தப்படும் தொழில்சார் டிப்ளோமா பயிற்சி நெறிகளுக்கு (N.V.Q. மட்டம் 05 & 06) மாணவர்களை அனுமதித்தல் - 2008**

இந்த வர்த்தமானி அறிவித்தலின்படி இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியால் (இலங்கை தொழில்நுட்பவியல் கல்லூரி) தொழிற்தகைமை பயிற்சி நெறிகள் தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் அவர்களது தகைமைகள் திறமைகளுக்கேற்பவும் கற்கை நெறிக்கு தேவையான எண்ணிக்கைகளுக்கேற்பவும் தெரிவு செய்யப்படுவர்.

2. விண்ணப்பதாரிகள் "13x8" அளவிலான தாளில் விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தப் படுகிறார்கள். மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிப்பட்டுள்ள பந்தி 13 இல் கூறப்பட்டதற்கு இணங்க ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திலும் ரூபா 10 முத்திரை ஒட்டப்பட்டு அதன் மேல் விண்ணப்பதாரர் தனது கையொப்பம் இடுவதன் மூலம் பெறுமதி நீக்கம் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2008.01. 04 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் "அதிபர், இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி, (இலங்கை தொழில்நுட்பவியல் கல்லூரி) ஒல்கொட்மாவத்தை, கொழும்பு 10" என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

3. குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4. தொழில்நுட்பக் கல்லூரிகளில் கற்கை நெறிகளைத் தொடர்வதற்கு அனுமதி கோரும் விண்ணப்பதாரிகள் -

(1) நற்பண்புகள் உடையவராக இருத்தல் வேண்டும்.
(2) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(3) விண்ணப்பம் சமர்ப்பிக்கும் போதே அனுமதிக்கு வேண்டிய தகைமைகள் அனைத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

5. தகுதியான விண்ணப்பதாரிகள் தெரிவு பரீட்சை, உளச்சார்பு பரீட்சை, நேர்முக பரீட்சை என்பவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் எந்த ஒரு ஆவணங்களையும் இணைத்தலாகாது. அவை நேர்முகபரீட்சையின் போது கட்டாயம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7. முழு நேரக் கற்கை நெறிகளைத் தொடரும் மாணவர்களுக்கு தமது குடும்பப் பொருளாதார நிலைமைக்கேற்ப, கல்லூரி வகுப்புகளுக்குச் சமுகமளிக்கும் நாளொன்றுக்கு ரூபா 20 வீதம் உதவிக் கொடுப்பனவானது மாதம் ஒன்றிற்கு ரூபா 450 இற்கு மேற்படாது வழங்கப்படும். முழு நேரக் கற்கை நெறிகளைத் தொடரும் மாணவர்களுக்கு தமது குடும்பப் பொருளாதார நிலைமைக்கேற்ப, ரூபா 2,500 வருடாந்தம் வழங்கப்படும்.

8. சகல ஆவணங்களின் நம்பகத்தன்மைக்கு விண்ணப்பதாரியே முழுப் பொறுப்புடையவராவார். மாற்றம் செய்யப்பட்ட அல்லது பொய்யான அல்லது உண்மை உறுதி செய்யத் தவறும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் கடுமையாகத் தண்டிக்கப்படுவர்.

11. வேறு கல்வித் தகைமைகள் :----.
வேறு பொருத்தமான தகைமைகள் இருப்பின்அவற்றின் விபரங்களைக் குறிப்பிடவும் : ------.

12. கல்வித் தகைமைகள் :-
(அ) க. பொ. த. (சா.த) பெறுபேறுகள் (இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல்) :

| சுட்டிலக்கம் | வருடம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| | | | |

13. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கு உட்பட்ட வரையில் உண்மையானவை என்றும் விண்ணப்பித்துள்ள பயிற்சி நெறிக்கு வேண்டிய தகைமைகள் எனக்கு உண்டு என்றும் இத்தால் உறுதி மொழிகின்றேன். மேலும் தொழில்நுட்பக் கல்லூரிக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் திட்டத்திற்கு இணங்குவேன் என்றும் தொழில்நுட்பக் கல்வி பயிற்சி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினது முடிவே இறுதியானது எனவும் ஏற்றுக்கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

ரூபா 10 பெறுமதியான முத்திரையை ஒட்டி அதன் மேல் கையொப்பமிட்டு பெறுமதி நீக்கம் செய்யவும்.

இணைப்பு

**இலங்கை தொழில்நுட்பவியல் கல்லூரி**

***கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் நடாத்தப்படும் தொழில்சார் டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு (N. V. Q. மட்டம் 05 & 06) மாணவர்களை அனுமதித்தல் - 2008***

| குறியீட்டு எண் | கற்கை நெறியின் பெயரும் இயல்பும் | இல. | அனுமதிக்காக தேவைப்படும் தகைமைகள் |
|---|---|---|---|
| COT/ Weld 5&6 | வில்பற்றாக பிடிப்பவர்) தேசிய தொழிற்றகைமையிலான பயிற்சி (NVQ)<br><br>முழுநேரம்: 2 வருடம்<br><br>மொழிமூலம் : ஆங்கிலம் | 01 | விண்ணப்பதாரிகள் கீழ்க் குறிப்பிட்ட தேசிய தொழிற்றகைமையிலான பயிற்சி (NVQ சான்றிதழை கைத்தொழிற்சாலை முன்கல்வி பயிற்சி நிறுவனத்தினூடாக பெற்றிருத்தல். (R.P.L.) அங்கீகரிக்கப்படும்<br><br>(ii) வில்பற்றாசு பிடிப்பவர் NVQ மட்டம் 3 அல்லது உயர்மட்டம்<br><br>அல்லது<br><br>(ii) உலோக உருவமைப்பாளர் தேசிய தொழிற்றகைமையிலான பயிற்சி (NVQ மட்டம் 03) சான்றிதழ் அல்லது உயர்மட்டம்.<br>அல்லது |
| | | 02 | தேசிய தொழிற்தகைமையிலான பயிற்சி N. V. Q சான்றிதழ் கற்கை நெறியை முடித்த பின்னர் குறித்த துறையில் ஒரு வருட பயிற்சி அனுபவம். |
| C.O.T/ Mech 5&6 | பொறியியக்கவியல் தேசிய தொழிற்றகைமையிலான பயிற்சி (NVQ)<br><br>முழுநேரம் : 2 வருடம் | 01 | விண்ணப்பதாரிகள் கீழ்க் குறிப்பிட்ட தேசிய தொழிற்றகைமையிலான பயிற்சி (NVQ மட்டம் சான்றிதழை கைத்தொழிற்சாலை முன்கல்வி பயிற்சி நிறுவனத்தினூடாக பெற்றிருத்தல் (R. P. L.) அங்கீகரிக்கப்படும்<br><br>(i) பொறியியக்கவியலாளர் NVQ. மட்டம் 03<br><br>அல்லது |

| குறியீட்டு எண் | கற்கை நெறியின் பெயரும் இயல்பும் | இல. | அனுமதிக்காக தேவைப்படும் தகைமைகள் |
|---|---|---|---|
| மொழிமூலம் : ஆங்கிலம் (தொடர்) | | | (ii) NVQ மட்டம் 03 மின்னியலாளர் அல்லது உயர்மட்டம்<br>அல்லது<br>(iii) NVQ மட்டம் 03 வானொலி, தொலைக்காட்சி திருத்துனர்<br>அல்லது<br>(iv) NVQ மட்டம் உபகரண வடிவமைப்பாளர் அல்லது உயர்மட்டம்<br>அல்லது<br>(v) NVQ மட்டம் 03 வாயு இயக்க தொழில்நுட்பவியலாளர் அல்லது உயர்மட்டம்<br>(vi) NVQ மட்டம் 03 தேயிலை தொழிற்சாலை இயந்திர திருத்துனர் அல்லது உயர்மட்டம்<br>அல்லது |
| | | 02 | குறித்த துறையில் N. V. Q. சான்றிதழ் கற்கை நெறியை முடித்த பின்னர் குறித்த துறையில் ஒரு வருட பயிற்சி அனுபவம் |
| COT/LIT 5 & 6 | தகவல் தொழில் நுட்பம் (I.T.) தேசிய தொழிற்றகைமையிலான பயிற்சி NVQ முழுநேரம் - 2 வருடம் மொழி மூலம் : ஆங்கிலம் | 01 | விண்ணப்பதாரிகள் கீழ் குறிப்பிட்ட தேசிய தொழிற்றகைமையிலான பயிற்சி NVQ மட்டம் சான்றிதழை கைத்தொழிற்சாலை முன்கல்வி பயிற்சி நிறுவனத்தினூடாக பெற்றிருத்தல் (R. P L) அங்கீகரிக்கப்படும்<br>அல்லது<br>(i) (NVQ மட்டம் 03) கணனி உதவியாளர் அல்லது உயர்மட்டம்<br>அல்லது<br>(ii) வன்பொருள் தொழில் நுட்பவியலாளர் NVQ மட்டம் 03 சான்றிதழ் உயர்மட்டம்<br>அல்லது<br>(iii) வலயமைப்பு வடிவமைப்பாளர் NVQ மட்டம் 03 அல்லது<br>(iv) கிராபிக் டிசைனர் NVQ மட்டம் 3 அல்லது உயர்மட்டம்<br>அல்லது<br>(v) டெஸ்க்டொப் பப்ளிசர் NVQ மட்டம் 3 அல்லது உயர் மட்டம்<br>அல்லது |
| | | 03 | குறிப்பிட்ட துறையில் ஒரு வருடத்துக்கு குறையாத அனுபவத்தை கொண்டிருத்தல் அல்லது பயிற்சி நெறியை தொடர்ந்தபின் அங்கீகரிக்கப்படக்கூடிய தொழில்சார் சான்றிதழை பெற்றிருத்தல். |

**குறிப்பு**.-பயிற்சிக்கு தகுதிபெற்ற விண்ணப்பதாரிகள் பூரண அனுமதி தகைமை பெறுவதற்கு பின்வரும் பரீட்சைகளுக்கு முகம் கொடுக்க வேண்டும்:-

(1) தெரிவு பரீட்சை
(2) உளச்சார்பு பரீட்சை
(3) நேர்முகப்பரீட்சை

**கவனிக்கவும்**.- தெரிவு பரீட்சை கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கொண்டிருக்கும். ஆனால் க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் கணிதத்தில் திறமைச் சித்தியும் விஞ்ஞானம் ஆங்கிலத்தில் சித்தியும் பெற்றிருப்பின் தெரிவு பரீட்சையிலிருந்து விலக்களிக்கப்படும். நேர்முக பரீட்சையும் உளச்சார்பு பரீட்சையும் சகல பரீட்சார்த்திகளுக்கும் கட்டாயமானதாகும்.

12-245

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.